★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் [illegible] பங்குனி 3 ஜ. ஆதி 12 இதழ் [illegible]
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16-3-84

எரிசாராய ஊழல்

## எம். ஜி. ஆர். மீதான குற்றச்சாட்டு நிராகரிப்பு

சென்னை, மார்ச், 15

எரிசாராய உற்பத்தியில் ஊழல் புரிந்ததாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மற்றும் இல அமைச்சர்கள் மீது தெரிவிக்கப் பட்ட குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்த நீதிபதி திரு ரனபிரதாவ்ராவ் கமிஷன் அக் குற்றச்சாட்டுக்களை நிராகரித் துள்ளது.

இத்தகவலை நிதியமைச்சர் திரு ஆர் நெடுஞ்செழியன் தமிழக சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

திரு எம் ஜி இராமச்சந்திரன் மீதான இது தொடர்பானஎந் தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப் படவில்லை என்று இக் கமிஷன் தெரிவித்துள்ளது.

எரிசாராய உற்பத்தியில் ஊழல் புரிந்ததாக எம். ஜி இராமச்சந்திரன் மீது தி மு க தலைவர் திரு மு. கருணாநிதியும் மற்றும் சிலரும் குற்றஞ்சாட்டி இருந்தனர்.

கமிஷனின் இத்தீர்ப்பை ஒரு தலைப்பட்சமான நடவடிக்கை யென்று தி மு க பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (வெ)

'ஈழநாடு'க்குக் கிடைத்த பிரத்தியேகச் செய்தி

# ஜெனிவா மாநாட்டில் இலங்கை தமிழர் நிலைமை பற்றி விளக்கம்

## உண்மை நிலையை விளக்கி தமிழர் குழு அறிக்கை சமர்ப்பித்தது

(நமது சிறப்பு நிருபர் ஜெயகாந்த்)

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில், உத்தி யோக பூர்வமான குழு இங்கு நடக்கும் ஐ. நா. மனித உரிமைகள் குழு மாநாட்டில் வெளியிட்டுள்ள அறிக்கையில் உண்மையில்லை என்று குறிப்பிட்டு, உண்மைநிலையை விளக்கியுள்ளதாகக் கூறி, தமிழர் குழுவொன்று அறிக்கையொன்றை அங்கத்தவர்கள் மத்தி யில் விநியோகித்துள்ளது.

சர்வதேச ஜூரிகள் சபை, சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியனவெளியிட்டுள்ள அறிக் கைகளை மேற்கோள் காட்டி இந்த அறிக்கையைத் தமிழர் குழு தயாரித்திருக்கிறது

அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொள்ளும் உப குழுக் களைத் தவிர சில ஸ்தாபன ஙகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கிறனர். அந்த ஸ்தாப னங்களின் மூலம் இலங்கைத் தமிழர் பிரதிநிதிகள் குழு இம் மகாநாட்டில் கலந்துகொள் கின்றது.

தமிழர் கூட்டணி முன்னாள் எம். பி. வி. என். நவரத்தி னம், எஸ். ஸி, சந்திரகாசன் 'தமிழ் டைம்ஸ்' ஆசிரியர்

(8-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூட்டுக்கு இளைஞர் பலி!

### இராணுவத்தினரின் கோரிக்கையை மீறினராம்

[வவனியா]

நிறுத்துமாறு சைகை செய் தும் நிற்காமல் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிர யோகத்தில் ஒரு இளைஞர் ஸ்தலத்திலேயே மரணமா னார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் முல்லைத்தீவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது:

இருமோட்டார் சைக்கிள் களில் வேகமாகப் போய்க் கொண்டிருந்த இருஇளைஞர் களை இராணுவத்தினர் நிறுத்து மாறு சைகை செய்தனராம். அவர்கள் அதைப்பொருட் படுத்தாமல் போகவே இரா ணுவத்தினர் துப்பாக்கிப் பிர யோகம் செய்தனர். என்று கூறப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

## நாட்டின் சகலவிதமான பயங்கரவாதங்களும் ஒழிக்கப்படும்

[கொழும்பு]

இந்நாட்டின் எல்லாப் பகுதி களிலிருந்தும் சகலவிதமான பயங்கரவாதங்களையும் ஒழித் துக்கட்ட வேண்டுமென்று நேற்று நடைபெற்ற சர்வ கட்சி மகாநாட்டில் ஏகமன தாக இணக்கம் காணப்பட் டது.

### சர்வகட்சி மாநாட்டில் இணக்கம்

தற்போது இலங்கையிலுள்ள நாடற்றவர்கள் 98 000 பேருக் கும் அதிகமானவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கவும் இம்மாநாட்டில் இணக்கம் தெரிவிக்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

வவனியாவில்

## ஆயுதப்படையினர் அட்டகாசம்!

(வவனியா)

ஆயுதப்படையினரின் அத்து மீறிய செயல்களையடுத்து நேற்றுமாலை வவனியா நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சில வன்செயல் களையடுத்து நகரில் பதட்டம் நில விய போதிலும் நேற்றுக்காலை யில் வவனியாவில் கடைகள் எல்லாம்திறக்கப்பட்டு வழமை போல் மக்கள் நடமாட்டம் இருந்தது

ஆனால் பிற்பகலில் ஆயுதப் படையினர் ஆங்காங்கே அட்ட காசம் செய்ததின் காரணமாக கடைகள் எல்லாம் பூட்டப் பட்டன.

நகரம் வெறிச்சோடி விட் டது!

## ஜனாதிபதி - 'அமிர்' சந்திப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலை கூட்டணி யின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச் சந் தித்து இடம் பெயர்ந்த ப

(8-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் சார்ஜன்ட் மீது துப்பாக்கிப் பிரயோகம்

[வவனியா]

நேற்று முன்தினம் இரவு வவனியா நகரில் வைத்து பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் மீது இனந்தெரியாத நபர்க ளால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இடது முழங்கையில் காய முற்ற ரணவிர ஏக்கநாயக்க என்ற இந்த பொலிஸ் சார் ஜன்ட் உடனடியாக வவனியா

(8-ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் வர்த்தகர் சுட்டுக்கொலை

### 'துரோகி' என்று வர்ணிக்கப்பட்டாராம்

[வவனியா]

முல்லைத்தீவில் 28 வயது வர்த்தகர் ஒருவர் துப்பாக்கி இளைஞர்களால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளனர்.

பி ஜெகரட்ணம் அல்லது மகேந்திரன் அல்லது 'ஜப் பான்' என்று அழைக்கப்படும் நபரே நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கி இளைஞர்களால் கொலைசெய்யப்பட்டவரா வார்.

இறந்தவரும் வேறு நான்கு இளைஞர்களும் முல்லைத்தீவி

(8-ம் பக்கம் பார்க்க)

சீமெந்து - இரும்பு விநியோகம்

கோப்பாய் தொகுதி

சீமெந்து-இரும்பு

மொத்த சில்லறை விற்பனையாளர்களாக
இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனமும்
இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனமும்

எம்மை நியமித்துள்ளது என்பதை
அறியத்தருகிறோம்.

● சீமெந்து ● இரும்பு ● கட்டிடப்பொருட்கள்
யாவற்றையும் கட்டுப்பாட்டு விலைக்கு
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சில்லறை வியாபாரிகட்கு விசேட
கழிவுண்டு.

★ விநியோக வசதிகளும் உண்டு. ★

M. கருணாதேவி J. C. C. Ltd.

உரும்பிராய் சந்தி—உரும்பிராய்

1417

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சாயம்போட்ட நூல்களும், சலவை நூல்களும் 40s 50s இல் நியாயமான விலைக்கு விற்பனைக்கு உண்டு. விரும்பிய நிறங்களில் சாயம் போட்டுக் கொடுக்கப்படும். வே. சின்னத்துரை 'அம்பிகை வாசா' ஆஸ்பத்திரி முன்பு சாவகச்சேரி. 1340

ஊரெழு, பலாலி வீதி பிள்ளையார்கோவிலுக்கு அருகில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (வீடு கட்டவோ, தொழிற்சாலைக்கோ உகந்தது. வ. தர்மலிங்கம் ராஜ்மகால், ஊரெழு. 1355

9 ஸ்ரீ தொடர்பிலக்க மொறிஸ் ஒக்ஸ்போர்ட் (Morris Oxford 71 மொடல் 2nd Owner) உன்னதமான நிலையில் உடன் விற்பனைக்குண்டு. சிவப்பு நிறம்-நிறமான பெயிலர் ஸ்ராஸ்டர்ட் எஞ்ஜின், கசெற் றேடியோ, ஒறிஜினல் சீற் உண்டு. A. ஸ்ரீதரன், மின்சார சபை, சுன்னாகம் அல்லது ஊரிக்காடு, வல்வெட்டித்துறை 1357

புதிய மொடல் (185 மொடல்) CD 125T 86 ஸ்ரீ மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் (லக்கேஜ் பொக்ஸ், இரண்டு ஹெல்மெட், சைடு கவருடன்) உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 330, நாவலர் றோட், நல்லூர்-தெற்கு. 1361

ஜோன்சன் அவுட்போட் மோட்டர் 11 அடி கண்ணாடி இழை வள்ளமும், ஹொண்டா CD 185 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. பார்வையிடுவதற்குத் தொடர்புகொள்ளவும். 61, கோவில் வீதி, யாழ்ப்பாணம். போன்: 23172. [1868]

தெல்லிப்பளை ஸ்டேஷனிற்கு அருகாமையில் றிஜிஸ்ரூர் ஒழுங்கையில் வீட்டுடன் 4 பரப்புக்காணி சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சாம் தேவதாசன் றிஜிஸ்ரூர் ஒழுங்கை, தெல்லிப்பளை. 1381

ஹொண்டா C-70 (Brand New) 84/5000, ஹொண்டா CD-200 86/8000 விற்பனைக்கு உண்டு. P. T. இலிங்கநாதன் ஆஸ்பத்திரிவீதி, புங்குடுதீவு 1384

## வகுப்புகள்

கொழும்பில் இசைவகுப்புகளை நடத்திய திறமைமிக்க ஆசிரியையினால் யாழ். நகரிலும் மேல்நாட்டு வாத்திய இசை வகுப்புகள் (Piano) நடத்தப்படவுள்ளது. விரும்புவோர் நேரில் வரவும். 27/1 குருசோக் வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1241

## விற்பனைக்கு

உயிருடன் புறோயிலர்கோழி விற்பனைக்குண்டு 1 கிலோ 37/-ரூபா தொடர்புகொள்ளவும். ராஜா தியேட்டர். 1406

10'×8' அலுமாரிகள் உடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ சண்முகநாத அச்சகம், 836, காங்கேசன்துறைவீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 22185 [1397]

மலிவு விற்பனையும் பரிசு விநியோகமும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் உற்சவத்தன்று (கோவில் வீதியில்) 17-3-84 சனிக்கிழமை மிக்சைவற் உற்பத்திகளையாவும் மிக்சைவற் விளம்பர வாகனத்தில் மலிவாக வாங்கலாம் மிக்சைவற் மேலுறைகளை சேகரித்துவைத்திருப்பவர்கள் வாகனத்தில் ஒப்படைத்துப் பரிசில்களையும் பெற்றுக்கொள்ளலாம். 1859

ஹொலண்ட் ஆர். ஐ. ஆர், பிலிமத் றொக்ஸ், ஹீற்சசெக்ஸ், ஒஸ்ரொலொப்ஸ், செக்கிலிங் இனக் கோழிக் குஞ்சுகள் ஒடருக்கு மட்டும் விநியோகிக்கப்படும். இரண்டுமாதம் வளர்ந்த ஹெசெக்ஸ் சேவல் குஞ்சுகள், முட்டை ட்றே, கோழிகளுக்கு பாவிக்கும் மீன் எண்ணை பெருமளவில் விற்பனைக்குண்டு. ராஜா ஸ்ரோர்ஸ் 2, பிரம்படி, கொக்குவில். 1353

## தேவை

தரமான அருநெல்லி, விளாம்பழம், அன்னாசிப்பழங்களும், மற்றும் ஜாம், முக்காலி வெற்றுப் போத்தல்களும் தொகையாகத்தேவை Jaftex, 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1393

யாழ். மாவட்டத்திலிருந்து சில அடிப்படையில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள வான் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. 17ம் திகதி 2 மணிக்கு நேரில் சமூகமளிக்கவும். Jaf Tex, 222 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1394

கேற், கிறில் வேலைகளில் அனுபவமுள்ள ஒட்டுனர்கள் (Electric Welders) உடன் தேவை; விம்பி கம்பனி, 375, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1367

## சேவை

வெளிநாடு போக ஆவலுடன் துடிக்கிறீர்களா? Factory வேலைகளாக டிரைவர்களாக மத்திய கிழக்கு போக நாம் இலகுவழி காட்டுகிறோம். முத்திரையும் விலாசமும் கூடிய கடித உறையுடன் உடன் தொடர்பு கொள்ளவும். The Director, P. O. Box: 1967 Colombo. 1188

சகல விதமான தையல் மெசின்கள் மின் விசிறிகள், குளிர்சாதனப்பெட்டிகள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். உஷா சேல்சென்றர் 40, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1292

## தவறிவிட்டது

எனது சாரதி லைசென்சும் (014345) அடையாள அட்டையும் (650961668) 12-3-84ல் யாழ் நவுணில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து ஒப்படைக்கவும். தம்பிராசா பாலசிங்கம் மிகோ இன்டஸ்ரீஸ், தாவடி, கொக்குவில். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1395

## WANTED

For our Auto- Bulb manufacturing Industry in Jaffna, that started production recently, a suitable person with aptitude for training as a Technician under a foreign expert Apply with educational qualifications and experience - Northern Electricals Ltd. 43, Brown Road, Jaffna. 1275

சுன்னாகம்
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)
சுன்னாகம்.

## அறிவித்தல்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 8000 திற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனியும், வெற்று பரல்களும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-உம் ஏனையவற்றிற்கு ரூபா. 50/-உம் மீளளிப்பு வைப்புப்பணமாகச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலைநாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவு திகதி: 28-3-1984 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை.

பொது முகாமையாளர்.
சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்
14-3-1984. 1407

## ஆட்கள் உடன் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பபுளர் (Bubblers) தேவை. அனுபவத்திற்கேற்ப நல்ல சம்பளம் வழங்கப்படும். 16 — 22 வயதிற்கிடைப்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கும் உடனடியாகத்தேவை. உடன் நேரில் வரவும்.

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல்வேக்ஸ்
நீர்வேலி.
1808

## ரூ.3 ஆயிரம் துணிவகைகள் சிக்கின

(கண்டிக்குளி)

யாழ். நகரில் ரோந்தில் ஈடுபட்ட பொலிசார் சந்தேகத்தில் வீதியால் சென்ற ஒருவரது பார்சலை சோதனையிட்டபோது ரூபா மூவாயிரம் பெறுமதியான இந்திய துணிவகைகள் இருக்கக்கண்டு பிடித்தனர். பொலிசார் சந்தேக நபரையும், பொருட்களையும் யாழ் சுங்கத்திணைக்களத்தில் ஒப்படைத்தனர். விசாரணை நடைபெற்று வருகிறது.

## Wanted

Accounts Clerk/Typist (Male or Female) Minimum Five years Experience. Should be able to work Independently.

QUALIFICATION: G. C. E. O/L with Credit in English.

Adut No: 1380 C/o Eelanadu, JAFFNA, 1380

மீண்டும்! வெற்றிகரமாக!

சாட்டட் இடைநிலைப்பரீட்சை CHARTERED LICENTIATE } 84 August

ஆரம்பம்: 18-03 84 காலை 8-30 மணி

அரசாங்க கணக்காளர் சேவைப் பரீட்சை
(GOVT. ACCOUNTANT SERVICE EXAM.)
ஆரம்பம்: 24-03-84.

## K. G's INSTITUTE

இலங்கை வங்கி முன்பாக
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
1379

# ஏவரி (AVERY)

## வேமாஸ்டர் (Waymaster)

தயாரிப்பாளர்களின் சகல விதமான தராசு வகைகளையும் அதே விலையில் உங்கள் இடங்களில் விநியோகிப்போர் விற்பனைக்குப் பிந்திய சேவை உண்டு.

Service Contractஉம் ஏற்றுக்கொள்ளப்படும்.

## ஜெனரல் ரேடிங் கொம்பனி

646, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக)

மற்றும் ○ PVC பைப் வகைகள் ○ கட்டிடப் பொருட்கள் ○ தீந்தை வகைகள் எம்மிடம் விசேட கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (1398)

## 31ம் நாள் சிராத்ததின அழைப்பு

திருமதி செல்லக்கண்டு டேவிற் அருளம்மா

தோற்றம்: 25-03-1951
மறைவு: 16 02-1984



அன்னாரின் 31ம் நாள் சிராத்ததினமாகிய நாளை (17-03-84) காலை சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் திருப்பலிப்பூசையும் அதைத்தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் சிராத்ததின கிரிகைகளும் நடைபெறும். அவ்வமயம் வந்து கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர் நண்பர்களை அழைக்கிறேன்.

டேவிற் செல்லக்கண்டு
பலாலி தெற்கு, வசாவிளான். 1325

## கொழும்பு BEETEE VIDEO CLUB ஸ்தாபனத்தார்

தங்களது யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்களாக எங்களை நியமித்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
புதிய வெளியீடுகளை அன்றைய தினமே உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

## லிடோர் சென்றர்

இல. 2, J. M. C. கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24316
(லிடோ சினிமா முன்பாக)

இன்றைய புதிய வெளியீடு: பொழுது விடிஞ்சாச்சு (பிரபு, சுலக்ஷனா)

சகல வீடியோ கிளப் உரிமையாளர்களும், பொதுக்காட்சிகள் (PUBLIC SHOWS) ஒழுங்கு செய்பவர்களும், மேலும் விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும். (1386)

## ஜனநாயகக் கட்சி வேட்பாளர்

வாஷிங்டன், மார்ச் 15

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பிரதான எதிர்கட்சியான ஜனநாயகக் கட்சி வேட்பாளராக செனட்டர் கெரி ஹார்ட் தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு அதிகரித்துக் காணப்படுகிறது.

இதுவரை ஒன்பது இடங்களில் ஆரம்பநிலை ஜனநாயகக் கட்சி வேட்பாளர் தெரிவுக்கான தேர்தல்கள் இடம்பெற்றன. இவற்றில் திரு கெரி ஹார்ட் ஐந்து இடங்களில் வெற்றிபெற்றுள்ளார்.

செனட்டர் ஹார்ட்டை எதிர்த்து முன்னாள் அமெரிக்க உபஜனாதிபதி வோல்டர் மொன்டேல் போட்டியிட்டு வருகிறார். ஆயினும் அவரால் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை. எதிர்வரும் சனிக்கிழமையும் ஒரு தேர்தல் இடம்பெறவுள்ளது. அதிலும் திரு. ஹார்ட்டே வெற்றிபெறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. அத்தேர்தலை அடுத்து ஜனநாயகக் கட்சி வேட்பாளர்

(5-ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சமஸ்கிருத மாநாடு

போர்ட்லூயி, மார்ச் 15

முதலாவது சர்வதேச சமஸ்கிருத மாநாடு நேற்று மொரீஷியஸ் தீவில் ஆரம்பமானது. மொரீஷியஸ் பிரதம மந்திரி திரு. அனிருத் ஜகந்நாத் இம் மாநாட்டினை மொரீஷியஸ் தலைநகரான போர்ட் லூயியிலுள்ள மகாத்மா காந்தி கழகத்தில் ஆரம்பித்து வைத்தார்.

மொரீஷியஸ் தீவிலுள்ள அனைத்து மொழி நிறுவனமும், சமஸ்கிருத ஸ்தாபனமும் இம் மாநாட்டை ஏற்பாடுசெய்திருந்தன. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சமஸ்கிருத மொழிப் பேரறிஞர்களும் மற்றும் கல்விமான்களும் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

மொரீஷியஸ் பிரதம மந்திரி திரு அனிருத் ஜெகந்நாத் இம் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசியதாவ :-

"சமஸ்கிருத மொழி இந்து மதச் சடங்குகள், கிரியைகள் ஆகியவற்றில் இடம்பெற்றிருப்பதையே பலர் அறிந்துவைத்துள்ளனர். ஆனால் அம்மொழி மிகவும் தொன்மையானது வரலாறு, இலக்கியம் மற்றும் சமூக வளம் ஆகியனபற்றி அம்மொழி பல உயர்ந்த அரிய தகவல்களைக் கொண்டுள்ளது" என்றார். (கி)

## துப்பாக்கிச் சூடு: 13 பேர் பலி!

புதுடில்லி, மார்ச் 15

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகமொன்றில் இரு குழந்தைகள் உட்படப் பதின்மூன்று பேர் கொல்லப்பட்டனர். நாற்பதுபேர் காயமடைந்தனர்.

இத்துப்பாக்கிப் பிரயோகம் சரப்பந்தாட்டப் பந்தயமொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இடம்பெற்றது. மணிப்பூரில் இயங்கிவரும் தீவிரவாதிகளே இதனை நடத்தினர் என்று தெரியவந்துள்ளது

மணிப்பூர் மாநிலம், பர்மா நாட்டுக்கு அருகேயுள்ளது. இம் மாநில தீவிரவாதிகள் தமக்கு கூடுதல் சலுகை தரப்பட வேண்டுமெனக் கோரிவருகின்றனர். சிலகாலத்துக்கு முன்னர் இம்மாநிலத்திலும் வன்முறைகள் பலவாக வெடித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது

தற்போது அங்கு இடம்பெற்றுள்ள மேற்குறிப்பிட்ட அசம்பாவிதம் குறித்து இந்திய தலைவர்கள் பலர் கவலை தெரிவித்துள்ளனர். (கி)


றேடியன் பிறடக்ஸ் பிரைவேட் லிமிட்டெட். றேடியன் பிறடக்ஸ் பிரைவேட் லிமிட்டெட்.

# றேடியன்

## பிறடக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.

## RADIAN PRODUCTS (PRIVATE) LIMITED

RP

### ஆரம்பம்: சித்திரை 1984

R P

றேடியனின் தீர்மானங்கள் திர்க்கமான சாத்திய அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டவை. இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளமுன் றேடியன், சந்தை வளங்கள் ஏற்றுமதி, இறக்குமதி மூலமான உண்மை வருமானமீறுக அனைத்தையும் அடக்கிய சாத்திய ஆய்வொன்றை நடத்தினர் இவை அனைத்தையும் ஆய்ந்தறிந்த பின்னரே இத்திட்டம் ஏற்கப்பட்டது. இத்திட்டத்தை முன் வைத்தே கைத்தொழில் விஞ்ஞான அமைச்சிடமிருந்து றேடியன் உற்பத்திக்கு 1981-ம் ஆண்டு அனுமதி பெற்றது.

வட இலங்கையில் முதன் முதலாக ஏற்றுமதித் தரத்திற்கு, ஏற்றுமதிக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள றேடியன் றப்பர் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலையினரால் விற்கப்படவிருக்கும் பங்கு விபரங்களும், தொழில் விபரங்களும் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| பங்கு முலதனம்: | அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ரூபா | 3,00,00,000.00 |
| | சாதாரண 10 ரூபா பங்குகள் | ரூபா | 77,00,000.00 |
| | வழங்கப்பட்டுள்ள பங்கு மூலதனம் | ரூபா | 67,00,000.00 |
| | வழங்கப்படவுள்ள 10 ரூபா பங்குகள் | ரூபா | 10,00,000.00 |

### பணிப்பாளர் சபை

P. நவரத்தினராஜா Q. C. —தலைவர்
அலெக்ஸாண்டர் றோட்,
கொழும்பு.

S. சோமசுந்தரம் —பிரதம பணிப்பாளர்
44, சோமசுந்தரம் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

S. செகராஜசிங்கம் —பணிப்பாளர்
No. 1 கொத்தலாவல ரெறேஸ்,
கொழும்பு-4.

C. கந்தப்பா —பணிப்பாளர்
தேயிலை ஆராய்ச்சி நிலையம்,
கண்டி.

E. M D மேதர் —பணிப்பாளர்
லோற்றன் றோட், (தொழில் நுட்ப
மானிப்பாய். ஆலோசகர்)

N. சிறீஸ்கந்தராஜா —பணிப்பாளர்
"கலையகம்",
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

## No. 1. Kotalawela Terrace, Colombo-4.

TELEPHONE: 688550.

நிறுவனத்தின் வங்கி
இலங்கை வங்கி, I. O B. (INDIA)

ஆலோசகர்கள்:
C F. D. LIMITED, New Market Building, Jaffna.
COLOMBO 52/1, Rajasingha Road, Colombo-6.

ஊக்குவிப்பாளர்கள், ஒத்துழைப்பாளர்கள்:
அம்பாடி லிமிட்டெட் கொம்பனி
இராஜாஜி றோட், சென்னை, இந்தியா.

தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கும் இடம்: கைதடி, நுணுவில், சாவகச்சேரி.

உற்பத்தி விபரங்கள்:

ரயர், பொருத்தில்லாத (Seamless) ரியூப்புகள், ரயர் புனரமைத்தல், மோட்டார் வாகனங்களுக்குரிய சகலவிதமான றப்பர் உதிரிப்பாகங்கள், வீட்டுப்பாவனைக்குரிய சகலவிதமான றப்பரலான பொருட்கள், அரிசி ஆலை றப்பர், உருளைகள்; சாதாரண வர்த்தக றப்பர் பொருட்கள், றப்பர் பாதணிகள், கால் துடைப்பிகள், றப்பர் பாய்கள், றப்பர் குழாய்கள், றப்பர் இல்லுகள், மின்சார பாவனைக்குரிய றப்பர் உதிரிப்பாகங்கள் இதைவிட றப்பர் சார்ந்த பிளாஸ்ரிக் பொருட்களும் உற்பத்திசெய்யப்படும்.

வரி அனுகூலங்கள்: ஏற்றுமதி வரிச்சலுகை (மொத்த உற்பத்தியில் 50% முன்னேற்பாட்டின்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது)

| | |
|---|---|
| ★ முதல் வருடத்தில் ஏற்றுமதிசெய்யப்படவிருக்கும் | ரியூப்புகள் 3 லட்சம். |
| | ரயர்கள் 3 லட்சம். |
| ★ இரண்டாம் வருட இலக்கு | ரியூப்புகள் 4 லட்சம். |
| | ரயர்கள் 4 லட்சம். |
| ★ மூன்றும் வருட இலக்கு | ரியூப்புகள் 6 லட்சம். |
| | ரயர்கள் 6 லட்சம். |

மேலதிகமாக பங்குகள் வாங்குபவர் இயக்குநர் சபையில் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். றேடியன் தொழிற்சாலைக்கு நவீன யந்திரங்கள் வரவழைக்கப்பட்டு, பொருத்தும் வேலைகள் யாவும் திறமைவாய்ந்த வெளிநாட்டு தொழில் நுட்ப வல்லுனர்களின் உதவியுடன் பூர்த்திசெய்யப்படும் நிலையில் இருக்கிறது

எதிர்வரும் சித்திரை வருடப்பிறப்புத் தினத்தன்று பாவனையாளர்களின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு றேடியன் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

முழுப்பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொலைபேசி இலக்கம்: ..........................
வாங்க இருக்கும் பங்கின் தொகை: ..........

## றேடியன் ஓர் நிலையான சிறந்த முதலீடு

றேடியன் பங்கு விற்பனை மிகக்குறுகிய காலத்தில் நிறுத்தப்படும் சொற்ப பங்குகளே விற்பனைக்குண்டு

உங்கள் பங்களிப்புக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

பங்கு வாங்குவதற்கு விரும்புவோர் இம் மாதம் 28-ந் திகதிக்கு முன்பாகத் தொடர்பு கொள்ளவேண்டும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
S. சோமசுந்தம்
44, சோமசுந்தரம் லேன் சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

# வளைகுடா யுத்த வலயத்தில் ஐ. நா. நிபுணர் பயணம்!

நியூயோர்க், மார்ச் 15

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வளைகுடாப் போரில் இரசாயன நச்சு ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதை ஆராய விசேட குழுவொன்றை அமைத்துள்ளது. இதில் இரசாயன ஆயுதங்கள், மற்றும் கருவிகள் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் அடங்குகின்றனர். இவர்கள் நேற்று முன்தினம் ஈரான் - ஈராக் போர் வலயங்களுக்குச் சென்றனர். ஈரானின் தென்பகுதியிலுள்ள போர்ப் பிரதேசமொன்றிற்கு இந்த நிபுணர்கள் குழு நேற்றுச் சென்றது. அங்கு இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இடமொன்றை அக்குழு பார்வையிட்டது.

அவ்விடத்தில் மண் கருநிறமான திரவமொன்றினால் சூழப்பட்டுக் காணப்பட்டது. அத்துடன் சிலவித்தியாசமான கொள்கலன்களும் காணப்பட்டன. குழுவிலிருந்த நிபுணர்கள் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட முகமூடி, கையுறைகள் ஆகியவற்றை அணிந்தே தமது ஆராய்ச்சியை நடத்தினர். இவர்கள் தாம் சேகரித்த சந்தேகத்திற்கிடமான பொருட்களைத் தம்முடன் எடுத்துச் சென்று மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வர்.

ஈராக் இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. இவற்றின் பிரயோகத்தினால் சுமார் 1,700 ஈரானிய வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அது தெரிவித்துள்ளது. ஆனால் ஈராக் இக்குற்றச்சாட்டுக்களை முழுமையாக மறுத்துள்ளது. இரசாயன ஆயுதங்கள் எதனையும் தான் பாவிக்கவில்லையென அது கூறியுள்ளது.

இதேவேளை நச்சு இரசாயன வாயுப் பிரயோகத்திற்குள்ளானவர்கள் எனக் கூறப்படும் ஈரானியர்கள் துருக்கியிலும், சுவிற்சர்லாந்திலுமுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

இவர்களைப் பரிசோதித்த டாக்டர்கள், ஒருவகை இரசாயன நச்சுப் பிரயோகத்திற்கு இவர்கள் உள்ளாகியுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகியுள்ளனர். ஆனால் உயிராபத்தெதுவும் இல்லையென்று கூறப்பட்டது. (இ)

## ஜனநாயகக்கட்சி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாரென்பது பெரும்பாலும் உறுதியாகிவிடுமென்று கூறப்பட்டது.

செனட்டர் திரு. ஹார்ட் 47 வயதானவர். கொலராடோ மாநிலத்தின் செனட்டராக இவர் இருக்கிறாரென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | நாட்டுவளம் (தமிழ்) |
| 6 05 | சிங்கள நிகழ்ச்சி |
| 6-25 | 'சாவுனு' சிறுவர் இசை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | பொதுஅறிவுப் போட்டி (சிங்களம்) |
| 7-45 | பிரிட்டனில் வாழும் இலங்கையர் பற்றிய சித்திரம் (சிங்களம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | பேட்டி நிகழ்ச்சி |
| 9·00 | பௌத்தமத நிகழ்ச்சி |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | பௌத்தமத பேச்சு (ஆங்கிலம்) |
| 10-05 | ஆங்கிலத் திரைப்படம் |
| 10-30 | உலகச் செய்தித் தலைப்புகள் |
| 10-35 | ஆங்கிலத் திரைப் படத் தொடர்ச்சி |
| 11-30 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## மிருதங்க தாளவாத்தியக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

ஏழாலையூர் மிருதங்க வித்துவான் சிவப்பிரகாசம் சந்திரனின் மிருதங்க தாளவாத்தியக்கச்சேரி நாளை 17-ந் திகதி சனிக்கிழமை இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும்.

நாளைக் காலை 9-45 மணிக்கு தமிழ்ச்சேவை ஒன்றில் இந்நிகழ்ச்சி இடம்பெறும். திரு. ரி ஜெயசுந்தரம், திரு. ஏ. கே. அச்சுதன் ஆகியோர் முறையே கஞ்சிரா, கடம் வாசிப்பர். திரு. எஸ். விநாயகமூர்த்தி வயலின் வாசிப்பார். (கி)

## சனசமூக நிலைய திறப்புவிழா

(வேலணை)

சரவணை கிழக்கு - வேலணை மேற்கு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சனசமூகநிலையத்தின் கட்டிடத் திறப்புவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. விழா நிகழ்ச்சிகள் திரு. கி. அருளம்பலத்தின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். புதிய கட்டிடத்தை இளைப்பாறிய ஆசிரியர் திரு. மு. மயில்வாகனம் திறந்து வைப்பார்.

பொதுமக்களின் நன்கொடையாலும், இளைஞர்களின் சிரமதானப்பணியாலும் சுமார் 50,000 ரூபா செலவில் இச் சனசமூக நிலையம் அமைக்கப்பட்டது. நிலையத்துக்கான காணியை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தானம் வழங்கியுள்ளது. (சு)

## யாருடையது

நவாலியைச்சேர்ந்த திரு. செல்லத்துரை மகேந்திரன் என்பவரது அடையாள அட்டையை மாதகல் மேற்கைச் சேர்ந்த திரு. சுந்தரம் நவரத்தினம் என்பவர் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## ஜெனிவா மாநாடு---

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

உபகுழுநிலையில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பது தெரிய வந்தது. உடனே இலங்கை அரசாங்கம் இந்த உபகுழுவில் அங்கம் வகிக்கும் பல நாடுகளை இலங்கை அரசு தொடர்பு கொண்டது. இலங்கையில் இருக்கும் சிங்கள தமிழ் சமூகங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்றும் இந்தக்கட்டத்தில் இங்கு உபகுழு இலங்கை அரசாங்கத்தைக்கண்டிக்குமாயின் அங்கு இந்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தோல்வியில் முடியலாம் என்றும் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் கேட்டிருக்கின்றனர்.

ஆகவே முதல் திட்டமிடப்பட்ட பிரேரணையை சில மாற்றங்கள் செய்து கீழ் வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கமிஷன் இலங்கையில் இரு சமூகத்தினருக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் உடனடியாக முயற்சி செய்யவேண்டும் என்றும், தற்பொழுது இலங்கை நாட்டின் உண்மையான தமிழ் சிங்கள அரசியல் பிரச்னை எந்த அளவில் இருக்கின்றது என்பதை இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ளப்படவேண்டும் என்றும் அதன் பின்னரே மனித உரிமைகள் உபகுழு தனக்கு முன் வைத்திருக்கும் அறிக்கைகளை ஆராய்ந்து சரியான ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1977ம் ஆண்டு தொடங்கி சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தில் பொதுச்சபை அங்கத்தவராக இருந்து வரும் வி. என். நவரத்தினம் தனது தனிப்பட்ட செலவினை பயன்படுத்தியே இந்த மாநாட்டுக்கு வந்துள்ளார்.

திரு. சேவியர் அமெரிக்க ஸ்தாபனம் ஒன்றின் பிரதிநிதியாக இந்த மாநாட்டுக்குச் சென்றுள்ளார். ஆரம்பத்தில் வி. என். உள்ளே புகமுடியாமல் இருந்தார். ஆனால் பின்னர் ஜெனிவாவில் இயங்கும் ஒரு ஸ்தாபனம் மூலம் பிரதிநிதி அட்டையைப் பெற்று வந்துள்ளார்.

இலங்கை உத்தியோகக்குழு மகாநாட்டுக்கு வந்திருந்த அத்தனை பேர்களுக்கும் உத்தியோக அறிக்கை ஒன்றை விநியோகித்து இருக்கின்றது.

அது வருமாறு!

ஜுலை ஆகஸ்ட் மாதங்களில் இலங்கையில் நடந்தது ஒரு இனக்கலவரம்.

ஜுலை ஆகஸ்ட் சம்பவங்கள் எதிர்பாராமல் நடந்த ஒரு தனிப்பட்ட சம்பவம்.

அரசு தன்னாலான முழு முயற்சிகளையும் முதல் தொடங்கி கடைசி வரையும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பாடுபட்டு இருக்கின்றது.

அரச பாதுகாப்புப்படைகள் எந்த வகையிலும் மனித உரிமைகள் மீறப்படும் அளவுக்கான சம்பவங்களில் பங்கு கொண்டோ அல்லது சம்பவங்களுக்கு பொறுப்பாகவோ இருக்கவில்லை!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொதுமக்களின் கொலைகள் பயங்கரவாதிகளை ஒழிக்க எடுத்த நடவடிக்கைகளே. 13 இராணுவ வீரரின் மறைவைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இவை.

வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்ட தமிழ்க்கைதிகள் அது தமிழ் - சிங்கள கைதிகளுக்கிடையில் நடந்த சண்டையின் நிமித்தம் ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் எவரும் பங்கு கொள்ளவில்லை.

## "சிறுவயதில் ஆங்கிலத்தை கற்றுக்கொள்ளவேண்டும்"

(மானிப்பாய்)

"நாம் சமூகத்தில் நல்ல பிரஜைகளாக இருக்க வழிவகுப்பதற்குச் சிறுவர்களாக இருக்கும் போது அறிவுக்கு விருந்தளிக்கும் சிறந்த நூல்களைத் தேடித் திரிந்து கற்கவேண்டும். ஆங்கில மொழி ஒவ்வொரு சமூகத்திற்கும் அவசியமாகும். இந்த ஆங்கிலக் கல்வியை நாம் சிறுபராயத்திலேயே இலகுவாகக் கற்றுக்கொள்ளமுடியும் ஆகையினால்தான் எம்மை நாடுவோர்க்கெல்லாம் எந்த வைபவத்திலும் நாம் ஆங்கில நூல்களை வழங்குகின்றோம்."

இவ்வாறு மானிப்பாய் இந்துக் கல்லூரி விடுதி மாணவர் ஒன்றிய நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச்செய்துவைத்துப் பேசுகையில் தொழிலதிபர் க. கனகராசா குறிப்பிட்டார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி விடுதி மாணவர் ஒன்றிய தலைவர் திரு க. மோகனதாசன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது. அவர் தமது தலைமையுரையில், இன்றைய

(8-ம் பக்கம் பார்க்க)


ஹோம் பிறுன்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-00
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

2 நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480

3. நியூ லங்கா அலுமினியம் இண்டஸ்றீஸ்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

4. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
463, காலி வீதி,
கொழும்பு-3
தொலைபேசி: 589190—587680

2. கையமன் ஸ்ரோர்ஸ்
வெள்ளவத்தை.



மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.



குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 16/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2, ஞானார்த்தபிரதீபமாவத்தை, த.பெ. இல. 9
(முன்னாள் மருதானைறோட்) கொழும்பு 8.
தொலை பேசி: 597965 9

Metropolitan


இலங்கையில் முன் எப்போதும் இதுபோன்ற போட்டி நடந்ததேகிடையாது

# நெஸ்டோமோல்ட் நெஸ்கியூறிற்றி பெக்ட் போட்டி

1-ம் பரிசு:


## வெல்லுங்கள்–மாதம் தோறும் ரூ.1000 வாழ்நாள் முழுதும்!

(அல்லது இப்போதே ரூ. 100,000 ரொக்கம்)



மூன்று 3-ம் பரிசுகள்:

ஒவ்வொன்றும் ரூ. 15,000 பெறுமதியான தங்கச் சங்கிலிகள்
(அல்லது சமமான ரொக்கப் பணம்)



2-ம் பரிசு:

மாதம் தோறும் ரூ. 500 வாழ்நாள் முழுதும்!
(அல்லது இப்போதே ரூ.50,000/- ரொக்கப் பரிசு)

100 ஆறுதல் பரிசுகள்:

ஒவ்வொன்றும் ரூ. 250 பெறுமதியான அமெரிக்கன் ஜோர்ஜெட் சாரிகள்
(அல்லது சமமான ரொக்கப் பணம்)



இப் போட்டியில் வெல்வது மிகச் சுலபம்! நீங்கள் செய்ய வேண்டியது இவ்வளவே; கீழ்க் காணும் கேள்விக்கு விடை எழுதி, நெஸ்டோமோல்ட் டின்னின் உட்புறம் உள்ள மென் தகரத் தாளுடன் இணைத்து, உங்கள் விண்ணப்பத்தாளை அனுப்ப வேண்டும். தயவு செய்து அந்த மென் தகரத் தாளில் சிவப்பு நிற 'நெஸ்கியூ றிற்றி' ஒட்டுத்தாள் இருக்கும்படி நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். அது இருக்கும் மென் தகரத் தாள் மட்டுமே போட்டிக்குச் செல்லுபடியாகும்.

முதலில் இழுக்கும் சரியான விடை (அதாவது, நடுவர்கள் முன்கூட்டியே சரி என்று தீர்மானித்து வைக்கும் விடையுடன் ஒத்துப்போகும் விடை) முதற் பரிசு பெறும். அடுத்து இழுக்கப்படும் சரியான விடைகள், வரிசைக் கிரமமாக 2-ம் 3-ம் மற்றும் ஆறுதற்பரிசுகளைப் பெறும்.




விலை: ரூ 41.90

பந்திக்கு முந்தும் பரிசுகள்:

வாரம் தோறும் வந்து சேரும் முதல் 25 சரியான விண்ணப்பங்களுக்கு ரூ. 100/- வீதம்! (பரிசு பெறுவோர் விபரம் இப் பத்திரிகையில் வாரம் தோறும் வெளிவரும்.)

போட்டி விதிகள்

1 எல்லா விண்ணப்பங்களும் தெளிவாகவும் முழுமையாகவும் இருக்க வேண்டும்.
2 எத்தனை விண்ணப்பங்களையும் ஒருவர் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் சிவப்பு நெஸ்கியூறிற்றி ஒட்டுத்தாள் பொறித்த, நெஸ்டோமோல்ட் மென் தகரத் தாள் இணைக்க வேண்டும்.
3 எல்லா விண்ணப்பங்களிலும் ''நெஸ்டோமோல்ட் நெஸ்கியூறிற்றி பெக்ட்'' என்று கடித உறையில் குறிப்பிட்டு, த. பெ. எண் 2061 கொழும்பு என்ற விலாசத்துக்குத் தபாலில் அனுப்ப வேண்டும்.
4 வாரம் தோறும் இழுக்கும் முதல் 25 சரியான விண்ணப்பங்களுக்கு ரூ. 100 வீதம் ரொக்கப் பரிசு கிடைக்கும். வேறு பரிசுகளையும் பெற இவர்களுக்குத் தகுதியுண்டு.
5 கம்பனி அதன் விளம்பரப் பிரதிநிதிகள் ஆகிய நிறுவன ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களையும் தவிர இலங்கையில் வசிக்கும் எவரும் போட்டியில் பங்கு பெறலாம்.
6 நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. மேற்கொண்டு கடிதத் தொடர்புகள் ஏற்கப்படமாட்டா.

மாதம் தோறும் ரூ. 1000/- வாழ்நாள் முழுதும் நம்ப முடியவில்லையோ?!

ஆம், நம்புவது கஷ்டம் தான்! ஆனாலும் இப் பரிசு உங்களுக்கானதாகலாம் ஏனென்றால் நீங்கள் போட்டியில் வென்றால் ரூ. 100,000/- தொகையை மக்கள் வங்கி நிலையான வைப்புக் கணக்கில் உடனே நாம் போட்டு வைப்போம். இத் தொகை மாதம் தோறும் ரூ. 1000/- வட்டிப் பணத்தைச் சம்பாதித்து உங்களுக்கு வழங்கும், வாழ்நாள் முழுதும்!


நினைத்துப் பாருங்கள்! மாதம் தோறும் மேலும் ரூ. 1000/- இடைத்தால் என்னவெல்லாம் செய்யலாம்!

(ஆனால், மாறாக, விரும்பினால் நீங்கள் ரூ. 100,000/- ரொக்கத்தை நேரடியாக முழுதாகப் பெற்றுக் கொள்ளலாம்) 2-ம் பரிசுக்கும் விதிகள் இதே போலத் தான்.

விரையுங்கள்! விண்ணப்பங்களை ஏற்கும் கடைசி நாள்: 25மே 1984.

விண்ணப்பத்தாள்

இவற்றில் இலங்கை ஆகக் கூடிய புகழ் பெற்றது எந்தப் பொருளுக்கு?




குறிப்பிட்ட கட்டங்களுள், உங்கள் கருத்துப்படி இப் பொருள்களின் முக்கியத்துவத்தை வரிசைப் படுத்தி இலக்கம் இடுங்கள். (அதாவது, உங்கள் முதலாவது தெரிவுக்கு '1'. இரண்டாவது தெரிவுக்கு '2' என்ற முறையில் இலக்கம் இடுங்கள்) உங்கள வசதிக்காக ஒரு பொருளுக்கு நாமே முன்கூட்டி இலக்கமிட்டிருக்கிறோம். (முக்கிய குறிப்பு: இந்தக் கூப்பனுடன் நெஸ்டோமோல்ட் டின்னின் உட்புறமுள்ள சிவப்பு நெஸ்கியூறிற்றி ஒட்டுட்தாள் பொறித்த மென் தகரத் தாள் இணைத்திருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்)

எல்லா விண்ணப்பங்களிலும், ''நெஸ்டோமோல்ட் நெஸ்கியூறிற்றி பெக்ட் என்று கடித உறையில் குறிப்பிட்டு, த. பெ. எண் 2061, கொழும்பு என்ற விலாசத்துக்கு தபாலில் அனுப்ப வேண்டும்.

பெயர்: ____________________

விலாசம்: ____________________

மாவட்டம்: ____________________

வியாபாரியின் பெயர், விலாசம்: ____________________

அனுமதிப்பத்திர இலக்கம் S/385

HTL NL 1441

# நெஸ்டோமோல்ட்

உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்.

**சாந்தி** (யாழ்: நகர்)
10-30, 2-30, 6-30
17—19 மட்டும்
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
**வந்தாளே மகராசி**
(புதிய பிரதி)

**வெலிங்டன்** மாலைக்காட்சி
தினசரி 3-30, 6-00
ஜெமினி - சரோஜாதேவி
**கல்யாண பரிசு**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 6-30, 9-30
சிவாஜி - K.R. விஜயா
**தவப் புதல்வன்**
(புத்தம் புதிய பிரதி)

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Michael york - David Niven
A MAN CALLED
INTREPID

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 3-30, 6-00
9-00
கமல்—ஸ்ரீதேவி— திலக
**மீண்டும்கோகிலா**
(சினிமாஸ் கலர்)

கடைசி சில தினங்கள்
**றீகல்** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 3-30, 6-15,
**பயணங்கள்**
**முடிவதில்லை**
- வண்ணம் -
Next:
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
**JANWAR**
- Color -
Music - Shankar
Jaikishan

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிந்தர் - ரூபா
**ஒரு தலைராகம்**
தமிழகத்தில் 365 நாட்களுக்கு மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்

**வெலிங்டன்**
தினசரி 10 30, 2-15,
4-30, 7-00, 9-15
Sean Connery in
THE WIND AND
THE LION
(more suitable for adults)
(Cinemas cope - Color)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-00,
4-30, 7-00, 9-30 p. m.
Jennifer O Neil in
**SCANNERS**
Their thoughts can kill
Strictly For Adults
(சில காட்சிகள் அதிர்ச்சியும் மனித இரத்தமும் சம்பந்தப்பட்டவையாகும் முன்கூட்டியே எச்சரிக்கிறோம்)
From 21-3-84
Charlton Heston in
MOUNTAIN MEN
(Adults Only)


**போயாதினத்தை யொட்டி இன்று சினிமாகாட்சிகள் இல்லை**

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 3-ம் திகதி

(16—3—84)

வெள்ளிக்கிழமை

மேடம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களை புகழின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும் கால் நடை விருத்திக்கும் இடமேற்பட முடியும்.

இடபம்: பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழி கோலப்படும் சிலருக்கு புதிதாகத் தொழில் கிடைக்கக் கூடும் வருவாயும் வளரும்.

மிதுனம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் புதிய நண்பர்களையும் கொண்டுவரும் மக்கள் பணியே மகேசன் பணியாகக் கருதுவீர்கள் அறவழிமூலம் மற்றவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள் பூமிப் பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

கடகம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் புதிய அனுபவங்கள் கிடைக்கும் குறிக்கோளில் வெற்றியுண்டு.

சிங்கம்: உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள் குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறையும்.

கன்னி: இல்லம் இன்று வீடு வெள்ளைபோல் இனிக்கும் இன் சாலின் மூலம் மற்றவர்களைக் கவர்வீர்கள் பொருள் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

துலாம்: ஆசாரக்குறைவான சம்பவங்கள் இடம் பெறும் உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தவும் கொடுக்கல் வாங்கல்களிலும் இன்று கவனம் செலுத்தவும்.

விருச்சிகம்: எதிர்பாராத வரவுகளுக்கும் இடமுண்டு வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும் பேச்சு வன்மையின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவர்வீர்கள் குடும்பத்தில் சுவையான நிகழ்ச்சிகளுக்கும் இடமுண்டு.

தனுசு: எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும் சிலருக்கு திடீர் திரவிய லாபமும் கிடைக்கும் கலகலப்பான தினம்.

மகரம்: பொதுப் பணியில் ஈடுபட விரும்புவீர்கள் அரசியல் வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கும் சிலர் புண்ணிய ஸ்தல யாத்திரை மேற்கொள்வதற்கும் இடமுண்டு.

கும்பம்: நலன்தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும் குடும்பத்தில் மிக்க மகிழ்ச்சியுண்டு நேர்மை வழி நிற்பீர்கள் பெரியோர்களின் ஆதரவும் கிடைக்கும்.

மீனம்: நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும் வியாபாரிகளாயின் பங்காளிகளிடம் பகைத்துக் கொள்ள வேண்டாம் பொருட் செலவும் உண்டு.

திருமலை வே. ரவீந்திரன்

அடித்துக் காயப்படுத்தி

## சம்பளப்பணம், சைக்கிளை கொள்ளையடித்தனர்!

(யாழ்ப்பாணம்)

சம்பளப்பணத்தை பெற்றுக் கொண்டு தமது சைக்கிளில் இரவு வேளையில் சென்று கொண்டிருந்த ஒருவர் அவ்வீதியில் வைத்து இனந்தெரியாதவர்களால் அடித்து காயப்படுத்தப்பட்டதுடன் அவரிடமிருந்த சைக்கிளையும் பணத்தையும் கைக்கடிகாரத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் பலாலி வீதியில் இடம்பெற்றது.

கோபாலபிள்ளை கணேசலிங்கம் என்ற நபரே இவ்வாறு காயப்படுத்தப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டவராவார்.

இவர் கடந்த மாதம் 23ம் திகதி இரவு 9-30 மணியளவில் பலாலி வீதிவழியாக சென்று கொண்டிருந்த சமயம் அவ்வீதியில் நின்ற மூவர் இவரை வழிமறித்து தடியினால் சோடாபோத்தலினால் அடித்து கீழே வீழ்த்திவிட்டு அவரிடமிருந்து 2,500 ரூபா பெறுமதியான சைக்கிள், பணம் 750 ரூபா, 1000 ரூபா பெறுமதியான கைக்கடிகாரம் மற்றும் பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றனராம்.

இதுதொடர்பாக மேற்படி நபர் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

## வலி மேற்கு புதிய உதவி அரசாங்க அதிபர்

(சங்கானை)

திரு. துரையப்பா வைத்திலிங்கம் வலிகாமம் மேற்குப் பகுதி உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்று பதவியை ஏற்றுள்ளார்.

இவர் கடந்த ஆறுமாத காலத்திற்கு முன் இடமாற்றம் செய்யப்பட்ட வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில் வடிவேலின் இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். திரு. வைத்தியலிங்கம் இம்மாற்றத்திற்கு முன் பூநகரி உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவர்.

## டாக்டர் சபாரத்தினத்துக்கு உயர்பட்டம்

(யாழ்ப்பாணம்)

பிரபல மகப்பேற்று நிபுணரான டாக்டர் சரவணமுத்து சபாரத்தினம் எவ். ஆர். சி. ஓ. ஜி. என்ற உயர் மருத்துவத் துறைப்பட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

டாக்டர் சபாரத்தினம் சென்ற ஐந்தாண்டுகாலமாக யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியில் மகப்பேற்று வைத்திய நிபுணராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் எம். ஆர். சி. ஓ. ஜி. பட்டம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் சபாரத்தினம் யாழ் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவராவார்.


(கு)

# 31வது நாள் நினைவஞ்சலி

15—02—84 இல் அகால மரணம் எய்திய

**செல்வன் இ. கலைச்செல்வன்**

[யாழ். இந்துக்கல்லூரி A/L மாணவன்]



முகிழ்ப்பு: 28-10-1965. சிதைவு: 15-02-1984

கண்ணா! எங்கள் கலைச்செல்வா!!
நினைவினிலே உனது உருவைச்
சிலையாகச் செதுக்கி
கண்ணீரால் அதன் திருமேனி கழுவி
முத்தங்கள் பொழிந்து திருப்பாதம் அலங்கரித்து
என்றென்றும்
கண்ணா! கண்ணா!! என்று
அர்ச்சித்து வாழ்த்திடுவம்.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, சகோதரங்களும்,
அன்பு நெஞ்சங்களும்.

மீசாலை வடக்கு, கொடிகாமம். 1889

NORTHERN PROVINCE TEACHERS'
PROVIDENT SOCIETY

**வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்**

## 50-வது ஆண்டுக் கூட்டமும் பொன்விழாவும்

இடம்: வைத்தீஸ்வரவித்தியாலயம், யாழ்ப்பாணம்.

காலம்: 18-3-84 ஞாயிறு முற்பகல் 9-30 மணி: ஆண்டுக்கூட்டம் பிற்பகல் 2-00 மணி: பொன்விழா.

பொன்விழாவில் சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றிய பெரியார்கள் கௌரவிக்கப்படுவார்கள். அங்கத்தவர் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| சே. சிவராஜா | து. விசுவநாதன் | அ. பஞ்சாட்சரம் |
| பொருளாளர் | தலைவர் | செயலாளர் |

காரியாலயம்: 12, கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

45 வயதிற்குட்பட்ட ஆசிரியர்களை வரையும் இச்சங்கத்தில் சேர்ந்து பயனடையுமாறு அழைக்கின்றோம்.

(1384)

# 31வது நாள் நினைவஞ்சலி

## கணபதிப்பிள்ளை வீரவாகு செல்லம்

கோண்டாவில் பலாலி றோட் திருச்செல்வம் வீதி கண்ணுடி பாலசிங்கம் அவர்களின் இல்லத்தில் 15-2-84ல் காலமான திருமதி கணபதிப்பிள்ளை வீரவாகு செல்லம் அவர்களின் 31வது நினைவு தினம் இன்று 16-3-84 வெள்ளிக்கிழமையாகும். அன்னாரின் ஆத்மசாந்திக்காக மனமொன்றிப் பிரார்த்திப்போமாக.



மக்கள், மருமக்கள்.

திருச்செல்வம் வீதி, கோண்டாவில். 1404

# வல்வை கடலில் நடந்த கடத்தல் சம்பவம்: 6 பேருக்கும் தலா ரூ. 49 லட்சம் அபராதம்!

(யாழ்ப்பாணம்)

வல்லிபுரக் கோவில் கடற்கரைப் பகுதியில் வைத்து 16 லட்சத்து 48 ஆயிரத்து 700 ரூபா பெறுமதியான கடத்தல் பொருள்களையும், 96 ஆயிரம் ரூபா பெறுமதியான இயந்திர வள்ளத்தையும் ஆறு நபர்களுடன் காரைநகர் கடற்படையினர் கைப்பற்றியிருந்தது தெரிந்ததே.

இவர்களை விசாரணை செய்த யாழ். மாவட்ட உப சுங்க சேகரிப்பாளர் திரு. இ. பொன்னையா பொருட்களைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டு ஆறு நபர்களுக்கும் தலா 49 லட்சத்து 46 ஆயிரத்து 100 ரூபா அபராதம் விதித்தார்.

குறிப்பிட்ட ஆறு நபர்களும் அபராதப் பணம் செலுத்த முடியாத நிலையில் இருந்ததால், நீதிமன்ற விசாரணைக்காக ஊர்காவற்றுறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 13-ம் திகதி அதிகாலை காரைநகர் கடற்படையினர் பருத்தித்துறை கடல் பகுதியில் ரோந்து சுற்றிய பொழுது வல்லிபுர ஆழ்வார் கோவில் கடலில் இயந்திர வள்ளம் ஒன்றைக் கண்டு சோதனை நடத்திய பொழுது, அதற்குள் 108 'வீடியோ டெக்'குகளும், 15 சாக்குகளில் 2 லட்சத்து 9 ஆயிரத்து 800 காஸட்டுகளுக்குப் பாவிக்கப்படும் 'சிப்பு'களும் இருந்ததென்றும், அதனுடன் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் ஆறுபேரைக் கைது செய்து ஊர்காவற்றுறை சுங்க சேகரிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (மா)

## மஹரகத் தொகுதி தேர்தல் ஆட்சேப வழக்கு: செலவு தொகையுடன் தள்ளுபடி

(கொழும்பு)

மஹரகத் தொகுதி தேர்தல் ஆட்சேப மனுக்கள் வழக்கு நேற்றுச் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

1983-ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற இடைத் தேர்தலில் ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. கே. ஜயக்கொடி தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து சிறீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. விஜயகுமாரணதுங்காவும், இன்னுமொருவரும் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த ஆட்சேபமனுக்களை தேர்தல் நீதியரசர் எச். டி. தம்பையா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்தார்.

பிரதிவாதிகள் சார்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபங்களை நீதியரசர் நிராகரித்தார்.

1983-ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஜனாதிபதி ஜெயவர்த்தன தவறான தகவல்களை தெரிவித்திருந்தாரென்று இந்த ஆட்சேப மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (வெ)

## இன்று வழிபாடு

(யாழ்ப்பாணம்)

சைவசந்திக வட்டப்பிரார்த்தனையும், தியான சாதனையும் சைவ பரிபாலன சபை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று முற்பகல் பிரார்த்தனை, யோக, தியான சாதனை ஆகியவைற்றுடன் நடைபெறும். ஆத்மஜோதி ஆசிரியரும், ஆன்மீக யாத்திரைமேற்கொண்ட ஜப்பானியபெரியார்களும் கலந்து கொள்வார்கள்.

## சிறுவயதில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் எதிர்காலத்தில் ஒளிவிடும் தீபங்களாக, நற் சமுதாயத்தினராக வாழ வேண்டுமானால் சிறந்த அறிவு நூல்களைக் கற்க வேண்டும். வாசிப்பதால்தான் மனிதன் பூரண மனிதனாகக் கருதப்படுகிறான். எனவே எமது விடுதி மாணவர்கள் தங்களது ஆற்றலையும் சிந்தனா சக்தியையும் வளர்த்துக்கொள்ள நூலக மொன்று அமைக்கப்பட வேண்டியது மிக அவசியமானது'' என்றார்.

இவ்வைபவத்தில் கல்லூரி அதிபர் எஸ். வி. மகேஸ்வேலு கலைப்புலவர் க. சி. குலரத்தினம் விடுதிப் பொறுப்பாசிரியர் வி. சுந்தரலிங்கம், கல்லூரி நூலகப் பொறுப்பாசிரியை செல்வி ஆர். கப்பையாபிள்ளை ஆகியோரும் உரைநிகழ்த்தினர். இறுதியாக விடுதி மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் கு. கருணாகரன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

## முல்லைத்தீவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள விடுதியொன்றில் மது அருந்திக் கொண்டிருக்கையில் ஆயுதம்தாங்கிய இருஇளைஞர்கள் திடீரென உள்ளே வந்து இறந்தவரை வெளியே கொண்டுசென்றனர் என்றும் பின்னர் அவர் தலையில் துப்பாக்கியால் சுடப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுடும்போது இளைஞர்கள் அவரைத் 'துரோகி' என்று வர்ணித்ததாகக் கூறப்படுகின்றது.

இவர் சுடப்படும் போது உதவிக்கு வந்த ஒருவர் காயங்களுக்குள்ளாகி அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இன்று

(வேலணை)

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை வேலணை மத்திய இளைஞர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

முதல் முதலில் தீவுப் பகுதியிலேயே பெண்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியும், வலைப்பந்தாட்டப் போட்டியும் இடம்பெறவிருக்கின்றது.

இப்போட்டிக்கு வேலணை மேற்கு, அல்லைப்பிட்டி, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் உள்ள விளையாட்டுக்கழகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பெண் பிள்ளைகள் பங்குபற்றவிருக்கின்றனர்.

## யாழ். உதைபந்தாட்ட லீக்: யாழ். பல்கலைக்கழகம் சாம்பியனாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

"யாழ். உதைபந்தாட்ட லீக்" யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் '7-பேர்' பங்குபற்றும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில், 'பி' பிரிவில் யாழ். பல்கலைக் கழகம் சாம்பியன் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

### இன்று 'ஏ' பிரிவு மோதல்

'ஏ' பிரிவுகளுக்கிடையிலான மேற்படி போட்டி இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது. 'ஏ' பிரிவுப் போட்டியின் இறுதியாட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

'பி' பிரிவுச் சாம்பியன் மோதலில், யாழ். பல்கலைக் கழகம் நாவாந்துறை சென். நீக்கிலாஸ் விளையாட்டுக் கழகத்தை 6—3 கோல்கள் வித்தியாசத்தால் தோற்கடித்தது.

இன்று ஆரம்பமாகும் 'ஏ' பிரிவுப் போட்டியில், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகம், குருநகர் 'பாடும்மீன்' கழகம், கிறீஸ்கோ கழகம், ஆனைக்கோட்டை யூனியன் கழகம் ஆகியன பங்கு பற்றுகின்றன. (வி)

## உரும்பராயில் இன்று ஜப்பானிய குருமார் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

வன்செயல்களின் போது மரணமான தமிழ் மக்களின் ஆத்மசாந்திக்காக, 'நிப்பொன் சங்மெயோயோஜி' சமய ஸ்தாபனத்தைச் சேர்ந்த குருமார்கள் இன்று காலை உரும்பிராயில் இந்து ஆலயம் ஒன்றில் பிரார்த்தனை செய்யவுள்ளனர்.

மேற்படி சமய ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஜப்பானிய குருமார்களில் மூவர் நேற்று யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானத்தைச் சந்தித்து உரையாடினார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல இடங்களில் உள்ள தமிழ் மக்களைச் சந்தித்தபொழுது அவர்கள் அமைதியை விரும்புவதை தாங்கள் உணர்ந்ததாகவும், அவர்களால் அமைதியை ஏற்படுத்த முடியும் என்பதைத் தாங்கள் அவதானித்துள்ளதாகவும், தங்களால் அதற்கு இயன்ற ஆதரவை அளிக்க முடியும் என்றும் ஆணையாளரிடம் ஜப்பானிய குருமார்கள் தெரிவித்தனர்.

இந்த அமைதிப் பணிக்கு ஆணையாளர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று குருமார் கேட்டபோது, பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக அவர் உறுதி அளித்தார். இதற்கிணங்க, யாழ் மாநகரசபை ஊழியர்களும் முடிந்தளவு நிதி உதவியை தேற்று வழங்கினர். (மா)

## வண்ணையில் இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் இன்று தேர்த்திருவிழா நிகழும்.

விநாயகர், வேலவர், ஈஸ்வரர், தேவி, சண்டேஸ்வரர் தனித்தனியாக ஐந்து தேரில் காட்சிகொடுப்பர். (ய)

## அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பத்திரகாளி அம்மனின் பத்தாவது அலங்காரத் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இவ்வேளை அன்று விசேட அபிஷேகங்களும், பூஜைகளும் இடம்பெறுவதுடன் மாலை அன்னதானமும் வழங்கப்படும்.

## மட்டக்களப்பு சம்பவம்: தீயசக்திகளின் செயலென கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியில் பயிலும் சிங்கள மாணவர்களையும், சிங்கள விரிவுரையாளர்களையும் உடனடியாகக் கல்லூரியைவிட்டுவெளியேறி விடவேண்டுமென்று எச்சரிக்கை விடுக்கப்பட்ட சம்பவம், மட்டுநகரிலிருந்து பல்கலைக்கழகத்தை அப்புறப்படுத்த விழையும் தீயசக்திகளின் செயலாக இருக்கலாம் என யாழ்ப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராசா கண்டித்துள்ளார்.

இது சம்பந்தமாக திரு. சு. ஸ்ரீஸ்கந்தராசா கண்டித்து அறிக்கையொன்றையும் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி சிங்கள மாணவர்களையும், சிங்கள விரிவுரையாளர்களையும் வெளியேற்றிவிடுமாறு சில இனவாதசக்திகள் எச்சரித்துள்ளது குறித்து யாழ் பல்கலைக்கழக மாணவரின் மனதை புண்படுத்தியுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## ஜெனிவா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி. இராசநாயகம் உட்பட இவர் தமிழர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜெனிவாவில், ஐ. நா. மனித உரிமைகள் குழு கூட்டத் தொடர் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. மனித உரிமை உபகுழுவின் சிபார்சினை அடுத்து இலங்கையில் நடந்த பிரச்சினைகள் குறித்து இந்தக் கூட்டத் தொடர் விவாதிக்கிறது.

இந்தக் கூட்டத் தொடரில் நாற்பத்தி மூன்று நாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகள் குழு பங்குபற்றுகின்றன.

இந்த 43நாடுகளைத் தவிர்ந்த ஏனைய நாடுகள் பார்வையாளர்கள் நிலையிலே கலந்து கொள்கின்றன. இலங்கை அரசாங்கத்துக்கும் பார்வையாளர்கள் நிலைதான்!

இலங்கையைச் சேர்ந்த வேறொரு குழுவில் தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் சாவகச்சேரி எம். பி. யுமான திரு. வி. என். நவரத்தினம், சட்டத்தரணி பிரான்ஸிஸ் சேவியர், திரு எஸ். ஸி சந்திரகாசன், 'தமிழ் டைம்ஸ்' ஆசிரியர் திரு. பி. இராசநாயகம் ஆகியோருடன் மற்றும் சிலரும் கலந்து கொள்கின்றனர்.

இலங்கைச் சம்பவங்கள் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதால், மனித உரிமைக் குழு கூடுகின்றபோது, இலங்கைச் சம்பவங்களைக் கண்டிக்கிறோம் என்றும், அங்கு நடந்தவைகளை ஆராய்வதற்கு ஐ நா. சபை விசாரணைக்குழு ஒன்றை அங்கு அனுப்பவேண்டும் என்றும், இலங்கை அரசாங்கத்திடமிருந்து அறிக்கை பெறவேண்டும் என்றும் அநேக அங்கத்தவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் சார்ஜன்ட்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து அவசர சிகிச்சைக்காக அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்டார்.

வவுனியாவில் சுமார் 8 வருடங்கள் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றியுள்ள இவர், கடந்த டிசம்பர் மாதத்தில் இரத்தினபுரி பொலிஸ் நிலையத்துக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் கைது செய்வதில் தீவிரமாகச் செயல்பட்டவரென்று கருதப்படும் இவர் வழக்கொன்றின் நிமித்தம் வவுனியாவுக்கு வந்திருந்தார்.

வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு சுமார் 800 யார் தூரத்திலேயே இவர் மீதான துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா ரூபவல் தியேட்டரில் படம் பார்த்துவிட்டு வருகையிலேயே இவர் சுடப்பட்டுள்ளார்.

காயமுற்றதும் திரு. ஏக்கநாயக்க இரத்தம் கொட்டிய நிலையில் பொலிஸ் நிலையத்துக்கு ஓடிச்சென்றுள்ளார் அங்கிருந்து அவசரமாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் கண்டியைச் சேர்ந்தவர்.

## இளைஞர் பலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்தவர் மரணமானார். மற்ற இளைஞர் தமது மோட்டார் சைக்கிளில் ஓடித் தப்பிவிட்டாராம்.

மரணமானவரின் சட்டைப் பையில் இருந்த ஒரு துண்டில் ஐ ஜெயக்குமார் 2-ம் குறுக்குத்தெரு — யாழ்ப்பாணம் என்ற முகவரிகாணப்படுகின்றன. இதைக்கொண்டு இறந்தவரை அடையாளம் காண்பதற்கு முயற்சி எடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரி பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது

## நாட்டின் சகலவித...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டது.

மத்திய அரசின் அதிகாரங்களைப் பரவலாக்குதலிலும் இணக்கம் காணப்பட்டது, மாவட்ட அபிவிருத்தி சபைக்குக் குறைந்த கீழ்மட்டத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக அமைப்பை ஏற்படுத்துதலிலும் இணக்கம் காணப்பட்டது,

குழுநிலையில் ஆராயப்பட்ட இந்த விடயங்கள் எதிர்வரும் 20-ம் திகதி மாலை மாநாட்டின் பூர்வாங்க நிலையில் சமர்ப்பிக்கப்பட்டு, ஆராயப்படும்.

சர்வகட்சி மாநாடு நேற்று மாலை 6-00 மணிக்கு ஆரம்பமாகி 6-30க்கு முடிவடைந்தது. (இ-வெ)

## ஜனாதிபதி-அமிர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக தமிழ் பொறியியல் மாணவர்களின் பிரச்னை தொடர்பாகக் கலந்துரையாடினார்.

தமிழ் மாணவர்களின் பொறியியல் பரீட்சை தொடர்பாகவே அமிர்தலிங்கம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்,

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகேயுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன அமிர்தலிங்கத்திடம் தெரிவித்தார், (வெ)

## தபால் நிலையக் கொள்ளை

(இரா. உதயகுமார்)

கல்லாறிலும், பெரிய போரதீவிலும் இடம்பெற்ற தபாலகத்தோர் கொள்ளை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு கே. நவரத்தினம் விசாரணை மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள முதலாவது தபால் நிலையக் கொள்ளைகள் இவை என்று கூறப்படுகின்றது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டின் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984—ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu, P. O. Box 49. Telegram: Eelanadu. Telephone: 22389—24126